II யோவான் - முன்னுரை

காலமும் இடமும்

யோவான் இந்த நிருபத்தை எபேசுவிலிருந்து கிபி. 90 ஆம் ஆண்டில் எழுதினார்.

ஆசிரியர்

அப்போஸ்தலர் யோவான்

மையக்கருத்து

விசுவாசிகளின் நடத்தை, வஞ்சகர்களைப் பற்றிய காரியங்கள், அவர்கள் ஏமாற்றும் விதமும், நாம் எச்சரிப்போடு இருக்க வேண்டிய விதமும்.

புள்ளிவிவரங்கள்

அதிகாரம் - 1

வசனங்கள் - 13

பொருளடக்கம்

I. ஆசிரியரும் தெரிந்துகொள்ளப் பட்டவளுமாகிய அம்மாளுக்கும் அவளுடைய பிள்ளைகளுக்கும் வாழ்த்துரை (1:1-3)

II. அம்மாளின் பிள்ளைகள் சத்தியத்திலே நடக்கிறதற்காக சந்தோஷம் (1:4)

III. ஒருவரிலொருவர் அன்புகூர்ந்து கற்பனைகளைக் கைக்கொள்ள வேண்டும் (1:5-6)

IV. வஞ்சகர், அந்திக்கிறிஸ்து ஆகியோருக்கு எதிரான எச்சரிப்பு (1:7-8)

V. கிறிஸ்துவின் உபதேசத்தை மீறி நடக்கிறவனுக்கு எதிரான எச்சரிப்பு (1:9)

VI. கள்ளப்போதகர்களுக்கு என்ன செய்ய வேண்டும் (1:10-11)

VII. முடிவுரையும் வாழ்த்துரையும் (1:12-13)

II யோவான் - தொகுப்புரை

1 அதிகாரம்

I. ஆசிரியரும் தெரிந்துகொள்ளப் பட்டவளுமாகிய அம்மாளுக்கும் அவளுடைய பிள்ளைகளுக்கும் வாழ்த்துரை

2யோவான் 1:1 நமக்குள் நிலைநிற்கிறதும் என்றென்றைக்கும் நம்மோடிருப்பதுமாகிய சத்தியத்தினிமித்தம், நான் மாத்திரமல்ல, சத்தியத்தை அறிந்திருக்கிற யாவரும் சத்தியத்தின்படி நேசித்திருக்கிறவளும்,

2யோவான் 1:2 தெரிந்துகொள்ளப் பட்டவளுமாகிய அம்மாளுக்கும் அவளுடைய பிள்ளைகளுக்கும், மூப்பனாகிய நான் எழுதுகிறதாவது:

2யோவான் 1:3 பிதாவாகிய தேவனாலும் பிதாவின் குமாரனாயிருக்கிற கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும், கிருபையும் இரக்கமும் சமாதானமும், சத்தியத்தோடும் அன்போடுங்கூட, உங்களோடிருப்பதாக.

"என்றென்றைக்கும் நம்மோடிருப்பதுமாகிய சத்தியம்" - கிறிஸ்தவ உபதேசங்கள் நித்தியமானவை.

மூப்பன் (elder) யோவான் மூன்று வழிகளில் மூப்பனாக இருக்கிறார். அவையாவன:

1. ஸ்தானத்தின் மூலமாக யோவான் அப்போஸ்தலராகவும், பிரசங்கம் செய்கிற மூப்பராகவும் இருக்கிறார்.

2. அனுபவத்தினால் யோவான் ஒரு நல்ல கிறிஸ்தவ விசுவாசியாகவும், அப்போஸ்தலராகவும் இருக்கிறார். அப்போஸ்தலர்களில் வயதானவர் யோவானே. அநேக வருஷங்கள் ஆவிக்குரிய அனுபவம் உடையவர். யோவான் மட்டுமே இயற்கையான மரணமடைந்தார். மற்ற அப்போஸ்தலர்கள் அனைவரும் இரத்தச்சாட்சியாக மரித்தார்கள்.

3. அதிக வயதினால் மூப்பனாக இருக்கிறார். யோவான் இந்த நிருபத்தை எழுதியபோது அவருக்கு 90 வயதாயிற்று. (பிலே 1:9)

மூப்பன் (elder) - πρεσβύτερος - presbyteros - 4245

பெயரடை - முன்னோரான, மூப்பரான, முதிர் வயதுள்ள (அப் 14:23)

தெரிந்துகொள்ளப்பட்டவள் (elect) - ἐκλεκτός - eklektos - 1588

பெயரடை - தெரிந்துகொள்ளப்பட்ட (chosen, excellent, preeminent) (லூக்கா 18:7)

யோவான் இந்த நிருபத்தைக் கனம்பொருந்திய ஒரு ஸ்திரீக்கு எழுதியிருக்கிறார். அவளுடைய வீட்டில் ஒரு சபை ஆராதனை நடைபெற்றிருக்கலாம். இவள் திருமணமானவள். ஏனெனில் யோவான் இவளுடைய பிள்ளைகளுக்கும் வாழ்த்துதல் கூறி எழுதியிருக்கிறார். இவளுடைய கணவரின் பெயர் குறிப்பிடப்படாததாகையால் இவள் ஒரு விதவையாக இருந்திருக்க வேண்டும். தன்னுடைய ஊர் வழியாக வரும் அப்போஸ்தலர்களை இவள் தன்னுடைய வீட்டில் ஏற்றுக் கொண்டு, விருந்து உபசரித்திருக்க வேண்டும்.

அம்மாள் (lady) - κυρία - kyria - 2959

பெண்பால் பெயர்ச்சொல் - அம்மாள்

ஐயா (Lord) - κύριος - kyrios - 2962

ஆண்பால் பெயர்ச்சொல் - கர்த்தர், எஜமான், ஆண்டவர், ஐயா, உடையவர், தேவரீர்

"பிதாவாகிய தேவனாலும் பிதாவின் குமாரனாயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும்" - பிதாவும், குமாரனும் தனித்தனியாக வெவ்வேறு ஆள்தத்துவப் பண்புடையவர்கள் என்பதை இந்த வாக்கியம் விளக்குகிறது.

II யோவான் – தொகுப்புரை

1 அதிகாரம்

"பிதாவின் குமாரன்" **(Son of the Father)** - இந்த வாக்கியம் இந்த வசனத்தில் மட்டுமே பயன்படுத்தப் பட்டிருக்கிறது. இயேசு கிறிஸ்து பிதாவானவர் அல்ல என்பதையும், அவர் பிதாவின் குமாரன் என்பதையும் இந்த வாக்கியம் வலியுறுத்துகிறது. (யோவான் 1:14,18; யோவான் 3:16). இயேசு கிறிஸ்துவின் மனுஷ அவதாரம் கிறிஸ்தவ உபதேசத்தின் அஸ்திபாரமாகும்.

II. அம்மாளின் பிள்ளைகள் சத்தியத்திலே நடக்கிறதற்காக சந்தோஷம்

2யோவான் 1:4 பிதாவினால் நாம் பெற்ற கற்பனையின்படியே உம்முடைய பிள்ளைகளில் சிலர் சத்தியத்திலே நடக்கிறதை நான் கண்டு மிகவும் சந்தோஷப்பட்டேன்.

III. ஒருவரிலொருவர் அன்புகூர்ந்து கற்பனைகளைக் கைக்கொள்ள வேண்டும்

2யோவான் 1:5 இப்பொழுதும் அம்மாளே, நாம் ஒருவரிலொருவர் அன்புகூரவேண்டு மென்று, உமக்குப் புதிய கற்பனையாக எழுதாமல், ஆதிமுதல் நமக்கு உண்டாயிருக்கிற கற்பனையாக எழுதி, உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன்.

2யோவான் 1:6 நாம் அவருடைய கற்பனைகளின்படி நடப்பதே அன்பு; நீங்கள் ஆதிமுதல் கேட்டிருக்கிறபடி நடந்துகொள்ளவேண்டிய கற்பனை இதுவே.

"நாம் ஒருவரிலொருவர் அன்புகூரவேண்டும்" - யோவான் தன்னுடைய நிருபத்தில் அன்புகூருவதை வலியுறுத்திக் கூறுகிறார். புதிய ஏற்பாட்டில் அன்பு என்னும் வார்த்தை 116 தடவை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அவற்றில் யோவான் மட்டுமே அன்பு என்னும் வார்த்தையை 62 தடவைகள் பயன்படுத்தியிருக்கிறார்.

"நாம் அவருடைய கற்பனைகளின்படி நடப்பதே அன்பு" - புதிய ஏற்பாட்டிலுள்ள கற்பனைகளைக் கைக்கொள்வது நம்முடைய அன்பை நிரூபிக்கிறது.

IV. வஞ்சகர், அந்திக்கிறிஸ்து ஆகியோருக்கு எதிரான எச்சரிப்பு - (1யோவான் 2:18)

2யோவான் 1:7 மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கைபண்ணாத அநேக வஞ்சகர் உலகத்திலே தோன்றி யிருக்கிறார்கள்; இப்படிப்பட்டவனே வஞ்சகனும் அந்திக்கிறிஸ்து வுமாயிருக்கிறான்.

2யோவான் 1:8 உங்கள் செய்கைகளின் பலனை இழந்து போகாமல், பூரண பலனைப் பெறும்படிக்குஎச்சரிக்கையாயிருங்கள்.

"வஞ்சகர்" **(deceivers)** - வஞ்சகர்களும், அந்திக்கிறிஸ்துக்களும் இயேசு கிறிஸ்துவின் மனுஷ அவதாரத்தை மறுதலிக்கிறார்கள். (1யோவான் 4:1-6). இயேசு கிறிஸ்துவின் சரீர உயிர்த்தெழுதலை இவர்கள் நம்புவதில்லை. இயேசுகிறிஸ்து தமது சரீரத்தில் உயிர்த்தெழுந்தார். அதே சரீரத்தில் பூமிக்குத் திரும்பவும் வருவார். (சக 13:6; அப் 1:11; பிலி 3:21; 1கொரி 15:1-23; யோவான் 21:14).

வஞ்சகன் **(deceiver)** - **πλάνος** - **planos** - 4108

பெயரடை - எத்தரென்னப்பட்ட, வஞ்சிக்கிற **"deceiver"** (2யோவான் 1:7; மத் 27:63; 2கொரி 6:8) **" seducing"** (1தீமோ 4:1)

"உங்கள் செய்கைகளின் பலனை இழந்துபோகாமல்" - நாம் பூரண பலனைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அதற்குரிய நிபந்தனைகளுக்கு நாம் கீழ்ப்பட்டு ஜீவிக்க வேண்டும். (1கொரி 3:11-15)

V. கிறிஸ்துவின் உபதேசத்தை மீறி நடக்கிறவனுக்கு எதிரான எச்சரிப்பு - (1யோவான் 2:1-2, 24-25)

2யோவான் 1:9 கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல; கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையுங்குமாரனையும் உடையவன்.

II யோவான் - தொகுப்புரை

1 அதிகாரம்

"கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல" - சத்தியத்தில் நிலைத்திராமல் பாவம் செய்கிறவன் தேவனுக்குரியவனல்ல. சத்தியத்தில் நிலைத்திருந்து பாவம் செய்யாதவன் பிதாவையும், குமாரனையும் உடையவன். விசுவாசி தன்னுடைய வாழ்க்கையில் பின்மாறிப் போய், தனக்கு நியமிக்கப்பட்டிருக்கிற ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளாமல் இழந்துபோவதற்கு வாய்ப்புள்ளது. தேவனையும், கிறிஸ்துவையும் விட்டு விலகிப்போவதற்கும் வாய்ப்புள்ளது. (2 யோவான் 1:8)

VI. கள்ளப்போதகர்களுக்கு என்ன செய்ய வேண்டும் - (2 கொரி 11:12)

2 யோவான் 1:10 ஒருவன் உங்களிடத்தில் வந்து இந்த உபதேசத்தைக் கொண்டு வராமலிருந்தால், அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக்கொள்ளாமலும், அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள்.

2 யோவான் 1:11 அவனுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறவன் அவனுடைய துர்க்கிரியை களுக்கும் பங்குள்ளவனாகிறான்

"அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக் கொள்ளாமலும், அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள்" - இயேசுகிறிஸ்துவின் மனுஷ அவதாரம், அவருடைய மரணம், அடக்கம் பண்ணப்படுதல், சரீர உயிர்த்தெழுதல் ஆகிய உபதேசங்களைப் பிரசங்கம் பண்ணாமல் இந்த அஸ்திபார உபதேசத்திற்கு விரோதமாகப் பேசுகிறவர்களை நம்முடைய வீடுகளில் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. இப்பேர்ப்பட்ட பாவிகளை ஏற்றுக் கொள்ளும் விசுவாசிகள் அவர்களுடைய பாவங்களுக்கு உடந்தையாகவும், பங்காளிகளாகவும் இருக்கிறார்கள். (2 யோவான் 1:10-11).

VII. முடிவுரையும் வாழ்த்துரையும்

2 யோவான் 1:12 உங்களுக்கு எழுத வேண்டிய காரியங்கள் அநேகமுண்டு; காகிதத்தினாலும் மையினாலும் அவைகளை எழுத எனக்கு மனதில்லை. உங்களுடைய சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கு உங்களிடத்தில் வந்து, முகமுகமாய்ப் பேசலாமென்று நம்பியிருக்கிறேன்.

2 யோவான் 1:13 தெரிந்துகொள்ளப்பட்ட உம்முடைய சகோதரியின் பிள்ளைகள் உமக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள். ஆமென்.

"தெரிந்துகொள்ளப்பட்ட உம்முடைய சகோதரி" - தெரிந்துகொள்ளப்பட்ட அம்மாளுடைய சகோதரியாக இருக்கலாம்.